2015 செப்டம்பர் 21] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

6. அறிவிப்பு

பேரவைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்தல்—கால அட்டவணை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் (குறுக்கீடு) ஒற்றை மாற்று முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவை வகுத்துள்ள விதிமுறைகளின்படி, மதிப்பீட்டுக் குழு (Committee on Estimates), பொதுக் கணக்குக் குழு (Committee on Public Accounts), பொது நிறுவனங்கள் குழு (Committee on Public Undertakings), அவை உரிமைக் குழு (Committee on Privileges) ஆகியவற்றுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள், வேட்புத் தாள்களை 2015 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாள், புதன்கிழமை பிற்பகல் 1-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் எழுந்து நின்று அவையில் பேசிக்கொண்டிருந்தனர்.)

வேட்புத் தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (குறுக்கீடு)

வேட்புத் தாள்கள், 2015 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 23 ஆம் நாள், புதன்கிழமை மாலை 3-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள், 2015 ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 25 ஆம் நாள், வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம். (குறுக்கீடு)

வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழுக்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும். (குறுக்கீடு)

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையில் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

இதையெல்லாம் என்னுடைய அனுமதியில்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) என்னுடைய அனுமதியில்லாமல் அவையில் இப்படிப் பேசுவது, அவை நடவடிக்கைக்குக் குந்தகம் செய்வதாகும். உங்கள்மீது நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். (குறுக்கீடுகள்) நான் உங்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியதிருக்கும். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்கு ஒத்துழையுங்கள். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒத்துழைக்கவில்லையென்று சொன்னால், நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியதிருக்கும். (குறுக்கீடுகள்) நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியதிருக்கும். (குறுக்கீடுகள்) அவையைக் காலையிலிருந்து நடத்தவிடாமல் தடுக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) காலையிலிருந்து, கேள்வி நேரத்தில் ஆரம்பித்து, இதுவரையில் நீங்கள் இந்த அவையை நடத்தவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) முறையற்ற வகையில் இந்த அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற காரணத்தினாலே, இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) மாண்புமிகு உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்குக் காலையிலேயிருந்து, நான் பல முறை எச்சரித்தும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையினுடைய நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கிற காரணத்தினாலே, அவர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி நான் உத்தரவிட்டிருக்கிறேன். அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிப்பதால், அவர்களை வெளியேற்றும்படி நான் அவைக் காவலர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

இன்றைக்கு வேண்டுமென்றே, விதிகளுக்குப் புறம்பாக, இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் கேள்வி நேரத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று வந்து கேட்டார்கள். அதற்குப் பின்னாலே, Zero hour-லே அவர்களைப் பேச அனுமதித்ததற்குப்

2015 செப்டம்பர் 21] [பேரவைத் தலைவர்]

பின்னாலும், அவர்களை அனுமதித்ததற்குப் பின்னாலேயும், உரிய பதிலை நான் தெரிவித்ததற்குப் பின்னாலேயும், இன்றைக்கு அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்த காரணத்தினாலே, அவர்களை அவையிலிருந்து வெளியேற்ற வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான், அவர்களை இன்றைக்கு அவையிலிருந்து வெளியேற்றியிருக்கிறேன் என்பதனை மீண்டும் ஒருமுறை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

7. மானியக் கோரிக்கைகள், 2015–2016, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)
(ஆ) கோரிக்கை எண் 11–முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)
(இ) கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

(அ) கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015–2016 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 10–வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை). மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, கருணைக் கடல்; அம்மா, அறிவுச் சுடர்; அம்மா, ஆன்மிக ஜோதி; (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, அரசியல் ஞானி; அம்மா, உயர்ந்த இமயம்; அம்மா, அன்பு எனும் ஞானம்; மொத்தத்தில் அம்மா வாழும் மனித தெய்வம். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களை வாழ வைக்கும் குலதெய்வம்;